SRI LANKA

## இலங்கை கணக்கீட்டுத் தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

# மட்டம் I பரீட்சை - ஜனவரி 2022

**(Level I Examination - January 2022)**

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (103) பொருளியல் (ECN)

**லங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள ் கழகம்**
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு**

## இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்

## மட்டம் I - ஜனவரி 2022

## (103) பாருளியல்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(மொத்தம் 40 புள்ளிகள்) **பகுதி - A**

***வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**1.1** (2)

**1.2** (1)

**1.3** (2)

**1.4** (2)

*செய்கை*

PED = 100% / 50%

= 0.5(1 ஐ விட குறைவு)

**1.5** (3)

**1.6** (1)

**1.7** (3)

**1.8** (2)

**1.9** (4)

**1.10** (2)

**1.11** நீண்டகாலம்

**1.12** தவறு

**1.13** தவறு

**1.14** சரி

**1.15** தவறு

aat SRI LANKA

### 1.16 கேள்விக்கோட்டை வலதுபக்கம் நகர்த்தும் காரணிகள்

1. பதிலீட்டு பொருட்களின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு
2. நிரப்புப்பொருட்களின் விலையில் ஏற்படும் வீழ்ச்சி
3. நுகர்வோர் வருமான அதிகரிப்பு
4. நுகர்வோரின் சுவை தெரிவில் ஏற்பட்ட அதிகரிப்பு
5. குறிப்பிட்ட பொருளின் விலை எதிர்காலத்தில் அதிகரிக்கும் என்ற எதிர்ப்பார்ப்பு
6. நுகர்வோரின் எண்ணிக்கையில் ஏற்படும் அதிகரிப்பு

### 1.17 சிலருரிமைச்சந்தையின் முக்கிய பண்புகள்

1. சந்தையில் போட்டியிடும் நிறுவனங்களின் எண்ணிக்கை மிக குறைவாக காணப்படும்
2. புதிய நிறுவனங்கள் சந்தைக்குள் நுழைவதை தடுப்பதற்கான இயற்கையான அல்லது செயற்கையான தடைகள் காணப்படுதல்
3. சிலருரிமைச் சந்தை நிறுவனங்கள் பரஸ்பரம் ஒன்றிலொன்று தங்கியிருத்தல்
4. சிலருரிமைச் சந்தையில் விற்பனைசெய்யப்படும் பொருட்கள் ஓத்ததன்மை கொண்ட பொருட்களாகவோ அல்லது வேறுபடுத்தப்பட்ட பொருட்களாகவோ காணப்படும்.
5. சிலருரிமைச் சந்தையின் கேள்விக்கோடானது சாதாரண கேள்விக் கோடாக / முறிந்த கேள்வி கோடாக காணப்படும்

### 1.18 கேள்வித்தொகை மாற்றம் / கேள்வி அளவு மாற்றம்

குறிப்பிட்ட பொருளின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறாத போது குறிப்பிட்ட பொருளின் விலை மாற்றமடைய அதன் கேள்வித் தொகை மாற்றமடைவது கேள்வித் தொகை மாற்றம் எனப்படும். அதாவது குறித்த பொருளின் விலை குறைதல் அல்லது கூடுதலுக்கேற்ப அதன் கேள்வித் தொகை அதிகரித்தல் அல்லது குறைவடைதல் கேள்வி தொகை மாற்றம் என அழைக்கப்படும். இவ்கேள்வித் தொகை மாற்றத்தின் போது கேள்விக்கோடானது நகர்வடையாமல் கேள்விக்கோட்டின புள்ளியின் மேல் நோக்கியோ அல்லது கீழ்நோக்கியோ நகரும்.

இவ் கேள்வி தொகை மாற்றமானது பின்வரும் இரண்டு பிரிவுகளை கொண்டிருக்கும்.

1. கேள்வி நீட்டம் / விரிவு
2. கேள்வி ஓடுக்கம் / சுருக்கம்

குறிப்பிட்ட பொருளின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறாத போது குறிப்பிட்ட பொருளின் விலை குறைவடைய அதன் கேள்வித் தொகை அதிகரிக்கும் இதனை கேள்வித் தொகை நீட்டம் அல்லது கேள்வி விரிவு எனப்படும். கேள்வி நீட்டத்தின் போது கேள்வி கோட்டின் வழியே கேள்வி புள்ளியானது கீழ்நோக்கி அசையும்.

குறிப்பிட்ட பொருளின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறாத போது குறிப்பிட்ட பொருளின் விலை அதிகரிக்க அதன் கேள்வித் தொகை குறைவடையும் இதனை கேள்வித் தொகை ஓடுக்கம் அல்லது கேள்வித் தொகை சுருக்கம் எனப்படும். கேள்வி ஓடுக்கத்தின் போது கேள்வி கோட்டின் வழியே கேள்வி புள்ளியானது மேல்நோக்கி அசையும்.

**1.19 நீண்டகால உற்பத்தி நடைமுறை (The Long Run Production Process)**

நீண்டகாலக் உற்பத்தி செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் அனைத்து உள்ளீட்டு காரணிகளும் மாறும் காரணிகள் ஆகும். இங்கு நிலையான காரணிகள் எதுவும் உள்ளீடாக பயன்படுத்தப்படுவதில்லை. மேலும் நீண்டகாலத் உற்பத்தியில் நிலையான உற்பத்தி காரணிகள் யாவும் மாறும் காரணிகளாக மாற்றப்படுவதற்கான காலம் தேவைப்படுகின்றது. நிறுவனங்கள் நீண்ட காலத்திற்கு உற்பத்தியை விரிவாக்குவதற்கு அல்லது சுருக்குவதற்கு அதிக நெகிழ்ச்சி தன்மையை கொண்டது.

**1.20**

1. சேமிப்புகள்
2. இறக்குமதிகள்
3. அரச வரிகள்

*(02 புள்ளிகள் வீதம் , மொத்தம் 40 புள்ளிகள்)*

*பகுதி A முற்றும்*

மொத்தம் 40 புள்ளிகள் **பகுதி - B**

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

***அத்தியாயம் வணிகச்சூழல் தொடர்பான பொருளியல் எண்ணக்கருக்களும் அமைப்புகளும்.***

**(a)**

1 விநியோகத்தில் வரையறை இல்லை / பற்றாக்குறை இல்லை

2 வளங்களுக்கான உற்பத்திசெலவு இல்லை

3 பூச்சிய சந்தர்ப்பசெலவு

4 விலையில்லை

5 இயற்கையின் கொடை

6 தேளிவான உரிமையாளர் இல்லை

*(03 புள்ளிகள்)*

**(b)** திட்டமிட்ட பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சனையானது சமூக நலனை அடிப்படையாகக் கொண்டு மத்திய திட்டமிடல் குழுவினால் திட்டமிடல் நுட்பங்களைப் பயன்படுத்தி தீர்த்து வைக்கப்படுகின்றது.

**எதனை ? எந்தளவு உற்பத்தி செய்தல் வேண்டும் ?**

எந்தளவு உற்பத்தி செய்தல் வேண்டும் என்ற கேள்விக்கு அருமையான வளங்களை எவ்வாறு ஒதுக்கீடு செய்தல் என்பது முக்கிய தீர்மானமாகும். மத்திய திட்டமிடல் குழுவினால் விடுக்கப்படும் கட்டளைகள் மூலம் வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும் இங்கு திட்டமிடல் அதிகாரிகளால் பொருட்கள் சேவைகளின் விலைகள் நிர்ணயிக்கப்படும். அதேவேளை கொள்வனவாளர்களால் கட்டுப்பாட்டு விலையின் கீழ் நிரம்பல் செய்யப்பட்டுள்ள தொகைக்கு கேள்வி எழுப்பப்படும். இங்கு சமூகத்திற்கு அத்தியாவசிய பொருட்கள் சேவைகள் உற்பத்தி செய்ய வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

**எவ்வாறு உற்பத்தி செய்தல் வேண்டும்?**

திட்டமிட்ட பொருளாதாரத்தில் இப் பிரச்சனையானது சமூக நலனை அடிப்படையாகக் கொண்டு மத்திய திட்டமிடல் குழுவினால் தீர்த்து வைக்கப்படுகின்றது. இங்கு திட்டமிடல் அதிகாரிகளால் உற்பத்தித் தொழில்நுட்ப முறைகள் தீர்மானிக்கப்படுகின்றது. இங்கு பொருளாதாரத்திலுள்ள மாற்று உற்பத்தித் தொழில்நட்ப முறைகள் குறித்தும், எத்தகைய வளங்கள் காணப்படுகின்றன. (ஒப்பீட்டு ரீதியான காரணி நிரம்பலின் அடிப்படையில்) என்பது பற்றியும் பூரணமாக விபரங்களை திட்டமிடல் அதிகாரிகள் பெற்று பொருத்தமான தொழில் நுட்ப முறையை தெரிவு செய்வர்.

உதாரணம் - பொருளாதாரத்தில் வேலையின்மை அதிகரித்து காணப்படுகின்றது. ஆகையால் மூலதன ஊக்க முறைகள் அல்லது ஊழியர் வேலை முறைகள் இதில் எது வேலையின்மையை குறைக்கும் என்பதின் அடிப்படையில் தீர்மானித்தல்.

aat SRI LANKA

**யாருக்காக உற்பத்தி செய்தல்?**

திட்டமிட்ட பொருளாதாரத்தில் இப் பிரச்சனையானது சமூக நலனை அடிப்படையாகக் கொண்டு மத்திய திட்டமிடல் குழுவினால் தீர்த்து வைக்கப்படுகின்றது. இங்கு காரணி வருமானங்கள் அல்லது கூலிமட்டங்கள் மற்றும் பொருள்கள் சேவைகளின் விலைகள் திட்டமிடல் குழுவினால் தீர்மானிக்கப்படுகின்றது. சகலரும் விலைக்கொடுத்து கொள்வனவு செய்யத்தக்க விதத்தில் மிகக்குறைந்த மட்டத்தில் பொருள்கள் சேவைகளின் விலைகளை நிர்ணயிக்க திட்டமிடல் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பர். இங்கு மக்களது வருமானம் ஆனது மக்களின் உழைப்பு மற்றும் உற்பத்தி காரணிகள் ஆன நிலம், மூலதனம், முயற்சி தொகுதி ஆகும். வீட்டுத்துறை வருமானம் ஒரு நாட்டின் மனித வளத்தில் தங்கியிருக்கின்றன.

***(04 புள்ளிகள்)***

**(c) உழைப்பின் பண்புகள்**

1) இது உற்பத்தியின் நேரடி காரணி.
2) இது ஓரினத்தன்மை அற்றது
3) அசையும் தன்மைகொண்டது ஆனால் அதற்கான கட்டுப்பாடுகள் இல்லை.
4) பயிற்சி மற்றும் கல்வி மூலம் உற்பத்தித்திறனை அதிகரிக்க முடியும்.
5) உழைப்புக்கான காரணி கொடுப்பனவு கூலி அல்லது சம்பளம் ஆகும்.

***(03 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*


***அத்தியாயம் - 02 கேள்வி, நிரம்பல், நெகிழ்ச்சி சந்தை சமநிலை மற்றும் சந்தையில் அரசு தலையிடுதல்***

**(a)**

(i) $Q_d = 160 - 10p$
$Q_s = 30p$

| விலை | கேள்வித்தொகை (அலகுகள்) | நிரம்பல் தொகை (அலகுகள்) |
|---|---|---|
| 0 | 160 | 0 |
| 4 | 120 | 120 |
| 8 | 80 | 240 |
| 12 | 40 | 360 |
| 16 | 0 | 480 |

aat SRI LANKA




**சமநிலை விலை – Rs. 4/-**


**சமநிலை தொகை – 120 அலகுகள்**

***(04புள்ளிகள்)***

**மாற்று பதில்**

| **விலை** | **கேள்வித்தொகை (அலகுகள்)** | **நிரம்பல் தொகை (அலகுகள்)** |
|---|---|---|
| 0 | 160 | 0 |
| 1 | 150 | 30 |
| 2 | 140 | 60 |
| 3 | 130 | 90 |
| 4 | 120 | 120 |
| 5 | 110 | 150 |
| 6 | 100 | 180 |

aat SRI LANKA




**ii) உற்பத்தியாளர் மிகை**

**உற்பத்தியாளர் மிகை = (சமநிலை விலை - ஆகக்குறைந்த நிரம்பல் விலை) x சமநிலைத் தொகை / 2**

$$= \frac{(4 - 0) \times 120}{2}$$

= **240/-**

*(03புள்ளிகள்)*

**(b) ஒரு பொருளுக்கு அலக் வரி விதிப்பதால் ஏற்படும் விளைவுகள்**

ஒரு பொருளுக்கு மறைமுக வரியாக அலக் வரி விதிக்கப்படும்போது, பொருளின் பெருமதி குறைந்து, உற்பத்திச் செலவு உயரும். சந்தை வழங்கல் வளைவு வரி மற்றும் சமநிலை விலை அதிகரிப்பு மற்றும் அளவு குறைவதன் மூலம் இடதுபுறமாக மாறுகிறது.

**நேரில் வரியொன்றாக அரசாங்கத்தினால் பண்டமொன்றிற்கு அலகு வரியொன்று விதிக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள்**

1) சந்தை வழங்கல் குறைகிறது மற்றும் நிரம்பல் வளையி இடதுபுறமாக மாறுகிறது.

2) சமநிலை விலை அதிகரிக்கிறது மற்றும் சமநிலை தொகை குறைகிறது.

3) வரிக்கு முன்னும் பின்னும் நிரம்பல் வளைவுகளுக்கு இடையே உள்ள செங்குத்து தூரம் வரியின் அளவுக்கு சமம்.


4) மறைமுக வரிகள் காரணமாக நுகர்வோர் அதிகமாக செலுத்துகிறார்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் குறைவாக பெறுகிறார்கள். இதன் விளைவாக, நுகர்வோர் மிகை மற்றும் உற்பத்தியாளர் மிகை குறைகிறது.

5) வரிச்சுமை நுகர்வோர் மற்றும் தயாரிப்பாளர்கள் இருவர் மீதும் விழுகிறது, இதன் விளைவாக இரு தரப்பினரும் ஊக்கமிழக்கின்றனர்.

6) மறைமுக வரிகளால் அரசின் வரி வருவாய் அதிகரிக்கும்.

7) நுகர்வோர் வெவ்வேறு விலைகளில் வாங்க விரும்பும் அளவுகளில் எந்த மாற்றமும் இல்லை, வரி விதிக்கப்படுவதற்கு முன்னும் பின்னும், கேள்வி வளைவின் நிலையில் எந்த மாற்றமும் இல்லை.

***மறைமுக வரி விதிப்பதால் ஏற்படும் விளைவுகளை பின்வருமாறு படத்தில் விளக்கலாம்***




***(04 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

***வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

| ***அத்தியாயம் - 05 நிதிமுறைமை, பணம் மற்றும் பொதுவிலைமட்டம்*** |
|---|

**(a) பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள்**

1) உற்பத்தியை அதிகரிக்க உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல்

2) மொத்த நிரம்பலின் வளர்ச்சியை துரிதப்படுத்துதல்

3) மொத்தக் கேள்வியின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துதல்

4) வளங்களின் வினைத்திறன்மிக்க விநியோகத்திலான தடைகளை அகற்றுதல்

5) கடன் கட்டுப்பாட்டு வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல்.

6) விலைக் கட்டுப்பாட்டு வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல்.

7) மாற்று விகிதத்தை நிலைப்படுத்தவும் மற்றும் வர்த்தக பற்றாக்குறை மற்றும் சென்மதி நிலுவை பற்றாக்குறையை குறைக்கவும்.

8) இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்தல்

9) அதிகரித்த வட்டிவீதம் / வங்கிவீதம் கடன்களுக்கான கேள்வியினை குறைத்தல்

10) அரச பாதீட்டு பற்றாக்குறையினை குறைத்தல்

11) கடன்களின் மீள்கட்டமைப்பு

12) சேமிப்புக்களை அதிகரித்தல் மற்றும் ஊக்கப்படுத்தல்.

***(03 புள்ளிகள்)***

**(b) இலத்திரனியல் பணத்தைப் பயன்படுத்துவதன் மூன்று (03) அனுகூலங்களைக்**

1) மற்ற வகை பணத்துடன் ஒப்பிடும்போது மிகவும் திறமையானது.

2) இயற்பியல் நாணயங்களுடன் ஒப்பிடும்போது பாதுகாப்பான முறை (குறைந்த ஆபத்து).

3) விரைவான மற்றும் மிகவும் வசதியான (எளிதான பயன்பாடு) பணம் மற்றும் நேரத்தை மீதப்படுத்தல்

4) இந்தப் பணத்தை உலகெங்கிலும் உள்ள சர்வதேச பரிவர்த்தனைகளில் பயன்படுத்தலாம் (பெயர்வுத்திறன்).

5) அதிகரித்த சமூக அங்கீகாரம்.

*(03 புள்ளிகள்)*

**(c) அளவுசார் நாணயக் கொள்கைச் சாதனங்கள்**

**1) திறந்த சந்தை செயல்பாடுகள்**

திறந்த சந்தை தொழிற்பாடுகள் கடன் கட்டுப்பாட்டின் மற்றொரு முக்கியமான சாதனமாகும். திறந்த சந்தையில் அதிகப்படியான திரவத்தன்மையை உறிஞ்சுவதற்கு அல்லது உள்ளீடு செய்வதற்கு மத்திய வங்கி பத்திரங்களை கொள்வனவு அல்லது விற்பனை செய்வது இதன் கருத்தாகும். மத்திய வங்கி பத்திரங்களை விற்பனை செய்வது கடனளவைச் சுருக்குவதற்கும், பத்திரங்களை விற்பனை செய்வது கடனளவின் விரிவாக்கத்திற்கும் வழிவகுக்கும். மத்திய வங்கி பத்திரங்களை திறந்த சந்தையில் விற்கும்போது. வணிக வங்கிகளில் ஒன்றின் காசோலை வடிவில் பணம் பெறப்படும். கொள்வனவாளர் ஒரு வங்கியாக இருந்தால், இது கொள்வனவு செய்யும் வங்கிக்கு எதிராக வரையப்படும்.

**2) வங்கி விகிதக் கொள்கை**

வங்கி விகிதம் என்பது ஒரு நாட்டின் மத்திய வங்கி வணிக வங்கிகளுக்கு அவர்களின் நிதித் தேவைகளுக்காக வழங்கும் குறைந்தபட்ச விகிதமாகும். வங்கி விகிதத்தில் ஏற்படும் மாற்றங்கள் மூலம் மத்திய வங்கி வணிக வங்கிகளால் கடன் உருவாக்கத்தை பாதிக்கலாம். வங்கி விகிதம் அதிகரித்தால், அதிக வட்டி விகிதங்களின் விளைவாக வணிக வங்கியும் வங்கிகளின் கடன் விகிதத்தை அதிகரிக்கிறது. இதன் விளைவாக, கடனுக்கான தேவை குறைகிறது மற்றும் பண விநியோகமும் குறைகிறது. குறைந்த வட்டி விகிதத்தால் எதிர் விளைவுகள் வெளிப்படுகின்றன.

**3) ஒதுக்குவீதக் கொள்கை** – ஒதுக்கு வீதம் என்பது வணிக வங்கிகளின் வைப்புகளின் விகிதமாகும். கையில் அல்லது மத்திய வங்கியில் பண வடிவத்தில் பண மீதிகளாகப் பேணப்படும் வணிக வங்கி வைப்புகளின் வீதமாகும். ஒதுக்கு வீதத்தின் அதிகரிப்பு அல்லது குறைவு பண நிரம்பலில் அதிகரிப்பு அல்லது குறைவை ஏற்படுத்தும்

*(04 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*



aat SRI LANKA

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

*அத்தியாயம் - 06 சர்வதேச வர்த்தகம் மற்றும் நாணயமாற்று சந்தையும்*

**(a) வர்த்தக நிலுவை (Terms of Trade)**

சர்வதேச வர்த்தகத்தின் அடிப்படை அனுகூலமான சூழ்நிலையை தீர்மானிப்பது வெளிநாட்டு வர்த்தக மாற்று விகிதம் ஆகும். ஒரு நாட்டின் பெற்றுக்கொள்ளக்கூடிய பண்டங்களின் அளவினை மற்றைய நாடுகளுடன் பரிமாற்றி கொள்வது ஆகும். அதாவது ஏற்றுமதி அலகொன்றினால் பெற்றுக்கொள்ளக்கூடிய இறக்குமதி பண்டங்களின் அளவு வர்த்தக மாற்றுவீதமாகும்.

$$\textbf{வர்த்தக மாற்றுவீதம்} = \frac{\textbf{ஏற்றுமதி விலைச்சுட்டெண்}}{\textbf{இறக்குமதி விலைச்சுட்டெண்}} \times 100$$

*(03 புள்ளிகள்)*

**(b)**

முழுமையான நன்மை என்பது ஒரு நாடு ஒரு பொருளை அல்லது சேவையை குறைந்த செலவில் அல்லது மற்றொரு நாட்டோடு ஒப்பிடும்போது அதிக செயல்திறனில் உற்பத்தி செய்து, அத்தகைய பொருட்களை மற்றொரு தயாரிப்புகளுடன் பரிமாறிக்கொள்வதன் மூலம் ஒரு நன்மையைப் பெறும் சூழ்நிலையாகும்.

**உதாரணம் - 1**

இலங்கையும் இந்தியாவும் ஒரே மாதிரியான உள்ளீடுகளுடன் அரிசியை உற்பத்தி செய்கின்றன. இந்தியாவிலும் இலங்கையிலும் அரிசி உற்பத்திச் செலவு பின்வருமாறு இருக்கும்.

| நாடு | அலகு கிரயம் **Kg** |
|---|---|
| இந்தியா | ரூபா 100 |
| இலங்கை | ரூபா 150 |

மேலே விளக்கப்பட்டுள்ளபடி ஒவ்வொரு நாட்டிலும் உற்பத்தியின் விலையின்படி, **அரிசி உற்பத்தியில் இந்தியா முழு நன்மையையும், அரிசி உற்பத்தியில் இலங்கைக்கு முழுமையான பாதகமும் உள்ளது.**

**உதாரணம் - 2**

இலங்கையும் சீனாவும் ஒரு தொழிலாளர் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய அரிசி மற்றும் பொருட்களின் அலகுகளின் எண்ணிக்கை பின்வருமாறு.

| **நாடு** | **துணிகள்** | **அரிசி** |
|---|---|---|
| இலங்கை | 8 | 5 |
| சீனா | 4 | 7 |

துணிகளை உற்பத்தி செய்வதில் சீனாவை விட இலங்கைக்கு முழுமையான அனுகூலம் உள்ளது. அரிசியை உற்பத்தி செய்வதில் இலங்கையை விட சீனாவுக்கு முழுமையான நன்மை உண்டு.

*(04 புள்ளிகள்)*

**(c)**
இலங்கை நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியின் தாக்கத்தை குறைக்க பின்வரும் நடவடிக்கைகள் பயன்படுத்தப்படலாம்.

1) ஏற்றுமதியை ஊக்குவிக்கவும், ஏற்றுமதியின் போட்டித்தன்மையை அதிகரிக்கவும் உத்திகளைக் கையாளல்.
2) இறக்குமதி செலவினங்களைக் குறைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும்.
   **உதாரணம்** - அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் தடை
3) உள்நாட்டு வளங்களை கொண்டு உள்வாரியான மற்றும் வெளிவாரியான பொருளாதார சமமின்மையை குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தல்
4) எவ்வித தலையீடுகளும் இன்றி சுதந்திரமாக பணக்கொள்கை நடைமுறைபடுத்துவதற்கு வழிவகுத்தல்.இறக்குமதி செலவினை குறைப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்
5) இறக்குமதிக்கு மாற்றாக உள்நாட்டின் உற்பத்தியை ஊக்குவித்தல்.
   **உதாரணம்** - உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்குதல்

*(03 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

SRI LANKA

*பகுதி **B** முற்றும்.*

**பகுதி - C**

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

***அத்தியாயம் - 04 தேசிய கணக்கீடு மற்றும் அரசின் வகிபாகம்***

**(A)**

**(a)**

| | விபரம் | ரூபா (மில்லியனில்) |
|---|---|---|
| | தனியார் நுகர்வுச் செலவினம் | 7,500 |
| | அரசாங்க நுகர்வுச் செலவினம் | 2,400 |
| | மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம் | 800 |
| **(i)** | **மொத்த உள் நாட்டுச் செலவினம் (GDE) – சந்தை விலையில்** | **10,700** |

*(04 புள்ளிகள்)*

| | | ரூபா (மில்லியனில்) |
|---|---|---|
| | **மொத்த உள் நாட்டுச் செலவினம்** | **10,700** |
| | கூட்டல்: ஏற்றுமதிகள் | 1,300 |
| | கழிக்க: இறக்குமதிகள் | (2,000) |
| **(ii)** | **மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில்** | **10,000** |

*(03 புள்ளிகள்)*

| | | ரூபா (மில்லியனில்) |
|---|---|---|
| | **மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில்** | **10,000** |
| | கூட்டல்: நிகர வெளிநாட்டு முதன்மை வருமானம் | (600) |
| | | |
| **(iii)** | **மொத்தத் தேசிய வருமானம் (GNI) – சந்தை விலையில்** | **9,400** |

*(02 புள்ளிகள்)*

**(b)**

1) முறைசாரா பொருளாதாரத்தில் நடைபெறும் உற்பத்தி செயல்பாடுகளைச் சேர்க்காமை.

2) தேசிய உற்பத்தியில் சார்ந்து பொருளாதார நடவடிக்கைகளைச் சேர்க்காமை.

3) இல்லத்தரசிகள் வழங்கும் சேவைகளை தேசிய உற்பத்தியில் சேர்க்காமை.

4) தேசிய உற்பத்தி கணக்கீடுகளில் பொதுக் கடன்களுக்கு செலுத்தப்படும் வட்டியை சேர்க்காதது.

5) உற்பத்தி நடவடிக்கைகளால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சேதத்தை கருத்தில் கொள்ளாதது.

6) பொது சேவைகளில் உற்பத்தித்திறன் மாற்றங்களை கருத்தில் கொள்ளாதது.

7) உற்பத்தி நடவடிக்கைகளின் கீழ் பாதுகாப்பு மற்றும் போர்களுக்கான செலவினங்களை சேர்த்தல்.

8) நீண்ட ஆயுட்காலம் கொண்ட சில நுகர்வோர் பொருட்களை முதலீடுகளாக



aat SRI LANKA

வகைப்படுத்துவதன் மூலம் தேசிய உற்பத்தியில் சேர்க்காமை.

***(02 புள்ளிகள்)***

***அத்தியாயம் - 07 பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி***

**(B) ஒரு நாட்டின் எதிர்மறையான பொருளாதார வளர்ச்சியின் விளைவுகள்**

1) நாட்டின் உண்மையான தேசிய உற்பத்தியில் குறைவு

2) மக்களின் வாழ்க்கைத் தரம் குறைதல்

3) பொருளாதாரத்தின் நாணயத்தின் தேய்மானம்

4) பொருளாதாரத்தின் பணவீக்கம் அதிகரிப்பு

5) பரந்த வருமான ஏற்றத்தாழ்வுகளின் தோற்றம்

6) பிராந்திய ஏற்றத்தாழ்வுகளின் தோற்றம்

7) தற்போதைய நுகர்வு அளவு அதிகரிப்பு

8) சுற்றுச்சூழலில் பாதகமான தாக்கம்

9) உண்மையான வருமானத்தில் குறைவு

10) அதிக வேலையின்மை

11) நாட்டின் கடன் சுமை அதிகரிப்பு மற்றும் பிற நாடுகளில் இருந்து கூடுதல் கடன்களைப் பெறுவது கடினம்.

12) உற்பத்தி குறைப்பு

13) சமூகம் மற்றும் சமூகப் பிரச்சினைகளில் பாதகமான தாக்கம்.

***(03 புள்ளிகள்)***

***அத்தியாயம் - 04 தேசிய கணக்கீடு மற்றும் அரசின் வகிபாகம்***

aat SRI LANKA

**(C) பேரினப் பொருளாதார நோக்கங்கள்**

**1) விலை உறுதிப்பாடு**

விலை உறுதிப்பாட்டினை அடைவதற்கு பொருளாதாரத்தினைப் பணவீக்க அல்லது பணச்சுருக்க அழுத்தங்களின்றிப் பேணுதல் அவசியமானதாகும். பொருளாதாரத்தில் சராசரி விலைமட்டம் என்பது பொருளாதாரம் மிகக் குறைவான பணவீக்க வீதத்தினை எதிர்கொள்ளும் நிலைமையாகக் கருதப்படும்

**2) நிறைதொழில் மட்டம்**

ஒரு பொருளாதாரத்தில் காணப்படுகின்ற சகல வளங்களும் உச்ச வினைத்திறனுடன் பொருட்கள் சேவைகளின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் நிலை நிறைதொழில் மட்டம் எனப்படும். ஒரு பொருளாதாரம் நிறைதொழில் மட்டத்தினை அடைவதற்கு ஊழிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் வேலையின்மை நிலைமையைக் குறைப்பது அவசியமாகும்

**3) சென்மதி நிலுவை சமநிலை**

ஒரு பொருளாதாரதம் சென்மதி நிலுவை சமநிலை நிலையினை பேணுவதற்கு அந்நாடு அதன் எல்லைகளுக்கு அப்பால் ஏனைய நாடுகளுடன் நாணயமாற்று மேற்கொள்ளும் போது சென்மதி நிலுவை நெருக்கடிக்கு உள்ளாகாமல் சாதகமான முறையில் பேணுவது முக்கியமானதாக கருதப்படுகின்றது.

**4) நியாயமான வருமான பங்கீடு**

குடிமக்களிடையே ஏற்றதாழ்வுகளின்றி நியாயமான முறையில் பங்கீடு செய்யப்படுதலை உறுதி செய்வதன் மூலம் நாட்டில் சமத்துவத்தை எற்படுத்த முடியும். நாட்டின் ஒவ்வொரு குடிமக்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களைப் பூர்த்தி செய்யத்தக்க வகையில், வருமானமானது மீள்பங்கிடப்பட வேண்டும்

**5) நிலைத்து நிற்கும் பொருளாதார அபிவிருத்தி**

சுற்றுச்சூழலின் தரத்தைப் பாதுகாக்கும் அதே வேளையில் உற்பத்தியின் அளவை மேம்படுத்துதல் மற்றும் வளர்ச்சியின் நன்மைகள் மக்களிடையே விநியோகிக்கப்படுவதை உறுதிசெய்தல் மூலம் ஒரு நாடு நிலையான வளர்ச்சியை அடைய முடியும். சுற்றுச்சூழல், பொருளாதாரம் மற்றும் சமூகம் போன்ற வளர்ச்சியின் அனைத்து அம்சங்களும் நிலையான வளர்ச்சியாகும்.

**6) பொருளாதார வளர்ச்சி**

ஒரு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் (GNP) தொடர்ச்சியான அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சியாக அடையாளப்படுத்தப்படுகிறது.

SRI LANKA

***(06 புள்ளிகள்)***

***(மொத்தம் 20 புள்ளிகள்)***

***பகுதி C முற்றும்.***

***Notice:***

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

SRI LANKA

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*